<u>களப்பிரிவு ஊழியர்கள் - கடந்துவரும் - இருவழிப்பாதை பதவி உயர்வு ஒரு கண்ணோட்டம்.</u>

09.01.2014-ல் ஏற்பட்ட 12(3) ஒப்பந்தபிரிவு 12-ன்படி களப்பிரிவுதொழிலாளர்களின் இருவழிப்பாதை பதவி உயர்வில் உள்ள குறைபாடுகளை களைந்திட வாரிய உத்திரவு எண். 26, நாள்.4.3.2014-ல் உயர் அதிகாரிகளைக் கொண்ட ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது,

மேற்கண்ட குழு இது சம்மந்தமாக சங்கங்களின் கருத்துக்களை கேட்டுப் பெற்று தனது முதல் அறிக்கையை 31.05.2014-ல் சமர்ப்பித்தது. இந்த அறிக்கையின் மீது நிர்வாகம் சங்கங்களை அழைத்துப்பேசியது. குழுவின் அறிக்கையில் களப்பிரிவு தொழிலாளர்களின் தற்போது இருக்கும்

கள உதவியாளர் -- கம்பியாளர் / வணிக உதவியாளர் – மின்பாதை ஆய்வாளர் / வணிக ஆய்வாளர் – ஆக்க முகவர் – சிறப்பு நிலை ஆக்க முகவர் என்பதற்குப்பதிலாக

1) கள உதவியாளர் -- கம்பியாளர் -- மின்பாதை ஆய்வாளர் – ஆக்க முகவர் – சிறப்பு நிலை ஆக்க முகவர் என்ற பொறுப்புகள் கொண்ட தனி பதவி உயர்வு பாதையும்,

2) கள உதவியாளர் -- வணிக உதவியாளர் – வணிக ஆய்வாளர் – உதவி வணிக மேலாளர் – வணிக மேலாளர் என்ற பொறுப்புகள் கொண்ட தனி பதவி உயர்வு பாதையும், அமைப்பதற்கு பரிந்துரை செய்தது.

உதவி வணிக மேலாளர் என்பது ஆக்க முகவருக்கு இணையான புதிய பொறுப்பு ஆகும். வணிக மேலாளர் என்பது சிறப்புநிலை ஆக்க முகவர் என்ற பொறுப்புக்கு இணையான பொறுப்பாகும். பரிந்துரைபடி 340 உதவி வணிக மேலாளர், 170 வணிக மேலாளர் பொறுப்புகள் புதிதாக வழங்கப்படும். அதற்குப்பதிலாக 110.K.V.non grid S.S –ல் உள்ள 600 ஆக்க முகவர் பொறுப்புகள் இரத்து செய்யப்படும்.

தொழிற்சங்கங்கள் மேற்கண்ட வெவ்வேறு பொறுப்புகள் கொண்ட பதவி உயர்வு முறையை ஏற்றுக் கொண்டன. புதிய 340 உதவி வணிக மேலாளர் 170 வணிக மேலாளர் பொறுப்புகள் வழங்கப்படவேண்டும். ஆனால் 600 ஆக்க முகவர் பொறுப்புகள் குறைக்கக் கூடாது என்று கூறின. வாரியத்திற்கு கூடுதல் செலவு ஏற்படுமென்பதால் வாரியம் இதற்கு சம்மதிக்கவில்லை. எனவே குழுவின் முதல் அறிக்கை கைவிடப்பட்டது.

மீண்டும் குழு ஆலோசனை செய்து தனது இரண்டாவது அறிக்கையை 31.3.2015-ல் வழங்கியது. பரிந்துரையில் 1) வணிக உதவியாளர் / கம்பியாளர், வணிக ஆய்வாளர் / மின்பாதை ஆய்வாளர் ஆகிய இரு பொறுப்புகளுக்கும் பதவி உயர்வு பட்டியல் (Panel) ஒரே நேரத்தில் வெளியிட வேண்டும். 2) வணிக ஆய்வாளர் / மின்பாதை ஆய்வாளர் ஆகிய இரு பொறுப்புகளுக்கு பதவி உயர்வு வழங்கிட சமமாக 5 ஆண்டு பணிக்காலம் நிர்ணயிக்க வேண்டும் என்பவைகளை சங்கங்கள் ஏற்றுக் கொண்டன. ஆனால் களப்பிரிவு தொழிலாளர்களின் பதவி உயர்வுக்கு மாநில முதன்மை ( State Seniority ) பின்பற்ற வேண்டும் என்று

கூறியதை சங்கங்கள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன. எனவே இரண்டாவது அறிக்கையும் கைவிடப்பட்டது.

பின்னர் குழு மீண்டும் ஆலோசித்து கொடுத்த 3-வது அறிக்கையினை நிர்வாகம் 28.5.2016-ல் சங்கங்களுக்கு வழங்கி பேச்சு வார்த்தை நடத்தியது.

இந்த அறிக்கை சங்கங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. குறிப்பாக பிரிவு (e) " RWE promotion should be considered based on the Helper seniority and Helper seniority should be taken for all promotion aspects (ie) from the post of Helper" களப்பிரிவில் பதவி உயர்வுக்கு கள உதவியாளர் முதன்மை ( Helper Seniority) கணக்கிலெடுக்க வேண்டுமென்பது தங்களின் நெடுநாளைய கோரிக்கை என்பதால் சங்கங்கள் மகிழ்ச்சி அடைந்ததில் ஆச்சரியமில்லை.

ஆனால் பரிந்துரையில் பிரிவு (f) –ல் கூறப்பட்டிருக்கும் வாசகம் " The version of date of joining insisted in para 3 of the Memo.No. 051836/555/G.46/G.462/2010-6, dt.05.11.2010 for considering promotion to the foreman I Grade from the post of Line Inspector / Commercial Inspector may be deleted." என்பது பிரிவு (e)–க்கு முற்றிலும் முரண்பட்டது என்பதால் பிரிவு (f) –ல் சுட்டிக்காட்டியிருக்கும் வாரிய உத்திரவு Memo.No. 051836/555/G.46/G.462/2010-6, dt.05.11.2010 -னை முழுமையாக இரத்து செய்ய வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டோம்.

இருப்பினும் 9.1.2014 ஒப்பந்தப்படி அமைக்கப்பட்ட 3-வது பரிந்துரைக்கு இறுதி வடிவம் தந்து வாரிய நிர்வாகம் ( Per) (FB) TANGEDCO Proceedings No.2, dated 1.02.2017 –ல் உத்திரவும் வழங்கிவிட்டது.

மேற்படி உத்திரவில் பரிந்துரைப்பிரிவு (e)" RWE promotion should be considered based on the Helper seniority and Helper seniority should be taken for all promotion aspects (ie) from the post of Helper" என்பது இடம் பெறவில்லை.

ஆனால் துரதிஷ்டவசமாக பிரிவு (f) இடம் பெற்றுள்ளது. இதன்படி களப்பணியாளர் பதவி உயர்வுக்கு குறிப்பாக ஆக்கமுகவர் முதல்நிலை பதவி உயர்வுக்கு களஉதவியாளர் முதன்மை கணக்கிலெடுக்க முடியாது.

ஏனெனில் வாரிய உத்திரவு. 051836/555/G.46/G.462/2010-6, dt.05.11.2010 பத்தி 3-ல் " Helper seniority could not be taken for promotion to the post of F.m. I.Gr " என்றும் பத்தி4-ல் " the seniority assigned in the panel for promotion to the post of Commercial Inspector and line Inspector shall be taken in to account for consideration promotion to the post of Foreman I grade and not from the seniority of the Helper post " என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதே இதற்குக் காரணம்.

இந்த உத்திரவு நடை முறையில் இருக்கும்வரை களஉதவியாளர் முதன்மை (Helper seniority ) ஆக்க முகவர் முதல்நிலை பதவி உயர்வுக்கு கணக்கிலெடுக்க முடியாது. இதுதான் யதார்த்த நிலை.

TNEB Service Regulation 98 –லும் ஆக்க முகவர் பதவி உயர்வுக்கு கள உதவியாளர் முதன்மை (Helper seniority) கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறப்படவில்லை.

எனவே 9.1.2014 ஒப்பந்தம், குழுவின் அறிக்கை, சங்கங்களுடன் பேச்சு வார்த்தை இவைகளை காரணம் காட்டி ஏற்கனவே உள்ள நடைமுறையினை தடைப்படுத்தி களப்பிரிவு பதவி உயர்வு பிரச்சனையில், ஸ்தம்பித்த நிலையை ஏற்படுத்துவது நியாயம்தானா? இருவழிப்பாதை பதவி உயர்வில் கணிசமான தொழிலாளர்களுக்குள்ள குறைகளை களைய வேண்டியது நியாயமே. ஆனால் அது களையப்படும் வரை ஒட்டு மொத்த தொழிலாளர்களின் பதவி உயர்வையும் நிறுத்துவது சரியா?

களப்பணியாளர்கள் பதவி உயர்வுக்கு கள உதவியாளர் முதன்மையை (Helper seniority) கணக்கிலெடுத்திட தொடர்ந்து வற்புறுத்துவோம். இக்கோரிக்கையினை பெறும் வரை இடைப்பட்ட காலத்தில் தற்போதுள்ள விதிகள்படி தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு தடை பெறாமல் தொடர்ந்து கிடைத்திட பணியாற்றுவோம்.

“ தொழிலாளர் ஒற்றுமை ஓங்கட்டும்
தொழிற் சங்க ஒற்றுமை ஓங்கட்டும்.”